காத்திட்டு இருக்கேன்... இனியும் ஒருவாரம்தான் அவா் நம்ம கூட இருப்பாா்....." என்றான்.

நண்பா்கள் அனைவருக்கும் இச்செய்தி வருத்தத்தை கொடுத்தது. இன்னொரு கேள்வி அவா்கள் எல்லோா் மனதிலும் இருந்தது.– அது அறிவுமதி ஏன் திருமண வரவேற்பிற்கு வரவில்லை என்பதாகும்.

# 8.ஏதோ ஒரு வகை நிம்மதியை தேடி

வருடம் -1970

கிருஷ்ணகாந்திற்கு கிரிக்கெட் அல்லாமல் ட்ரிபிள்ஜம்ப் ( ஹாப், ஸ்டெப் அண்ட் ஜம்ப் ) மற்றும் போலட்வால்ட் ஆகிய விளையாட்டுகளிலும் ஆர்வம் இருந்தது தினசரி கல்லூரி மைதானத்தில் ஏதோ ஒரு விளையாட்டை கெஞ்ச நேரம் பயிற்சி செய்வான். கல்லூரி முடிந்தால் அவனை மைதானத்தில்தான் பார்க்கமுடியும். ஞாயிற்றுக்கழமைகளில் குறைந்த பட்சம் மதிய உணவு நேரம் வரும்வரையிலாவது கிரிக்கெட் பயிற்சி. அவனுக்கு ட்ரிபிள்ஜம்ப் குதிப்பது ஒரு கவிதை படிப்பது போல் சுவையாக இருந்தது. சரியான இடத்தில் ஓடிவந்து குறியிட்ட இடத்தில் (கோட்டில்) தவறு இல்லாமல் கால் வைத்து எம்பி நொண்டி அடித்து, எவ்வளவு தூரம் காற்றில் நிற்க முடியுமோ – அவ்வளவு தூரம் மிதந்து , மறுகாலை ஊன்றி- ஒரு அழுத்தம் கொடுத்து மீண்டும் ஒரு எம்பு எம்பி, எவ்வளவு தூரம் தள்ளிக் குதிக்க முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளிக் குதித்து விடுவதில் அவனுக்கு சுகம்.

இந்த விளையாட்டில் அவன் ஒரு சில பரிசுகளையும் பெற்றிருந்தான். அன்றும் அப்படித்தான் கிருஷ்ணகாந்த் மைதானத்தில் டிரிபிள் ஜம்ப் - பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். அவனுடன் 'கேப்டன்' செபாஸ்டின் , வசந்த், மனோகர்,டேவிட் ஆகியோர் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் போட்டி எதுவும் இல்லை.

அப்போது அங்கு துரை மைதானத்திற்கு வந்தான். அவனும் கிருஷ்ணகாந்துடன்M.com படிப்பவன்தான். ஆனால் அவன் விளையாட்டு மைதானத்தின் பக்கம் எட்டிப் பார்க்கமாட்டான். கண்ணனும் , துரையும் முறையே M.A (History) , M.sc (Physics) படிப்பவர்கள்.அவர்களும் மைதானத்தின் பக்கம் வரமாட்டார்கள். அவர்கள் சில நாட்கள் நூலகத்திற்குப் போய் தினசரிகள். புத்தகங்கள் படிப்பார்கள். சில நாட்கள் வீட்டிற்குப் போய்விடுவார்கள். விசுவநாதன் பட்டவகுப்பிற்கு மேல் தொடரவில்லை.

அன்புநம்பி விவசாயத்தை மேற்கொண்டுவிட்டார். ஒரு சிலர் வியாபாரத்திற்குப் போய்விட்டனர். இதில் கோபாலனுக்கு மட்டும் கொஞ்சம் அரசியல் ஆர்வம் இருந்தது. கேட்பவர்கள் விரும்பினால் அவன் எத்தனை நேரம் வேண்டுமானாலும் அரசியல் பேச தயாராயிருந்தான். துரைக்கு ஏதாவது பெரிய வேலையில் அமர வேண்டும் என்று ஆசையாயிருந்தது.

அதிசயமாக மைதானத்துப்பக்கம் வந்த துரை கிருஷ்ணகாந்தைப் பார்த்து ''கிருஷ்ணகாந்த்'' ஒரு நிமிஷம் இங்கே வா என்றான்.'' என்னதுரை என்ன விஷயம் என்று பயிற்சியை நிறுத்திக்கொண்டு துரையிடம் அருகே சென்றான். விளையாட வசதியாக அவன் ஷார்ட்சும், முண்டாபனியனும் மட்டுமே அவன் அணிந்திருந்தான்.

துரை, ''கிருஷ்ணகாந்த்'' –நம் அறிவுமதி நம்ம எல்லோரையும் இன்னிக்கு ராத்திரி 7 மணிக்கு அவசரமா பாக்கனும்னு சொல்றார். ஒரு ஏழு மணிக்கு அவரோட ரூமுக்கு வா என்றான். பின் ''நான் கோபாலனை லைப்ரரிலேயே பாத்துச் சொல்லிக்கிறேன். கண்ணனை கேண்டீன்லே பார்த்து சொல்லிட்டேன். நீ வரும்போது விசுவநாதனைப் பாத்து கூட்டிட்டு வந்துடு-'' என்றான். 'சரி' என்ற கிருஷ்ணகாந்த், 'கொஞ்சம் பொறு' என்றான், பயிற்சியைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு உடைகள் அணிந்து புறப்பட்டான். அவன் அறிவுமதியைப் பார்த்தே ஒரு வாரமாகிவிட்டது. என்ன விஷயமாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டே அவன் துரையுடன் புறப்பட்டான்.

முன்னிரவு 7.30 மணி இருக்கும். அறிவுமதியின் அறையில் நண்பர்கள் அனைவரும் கூடிவிட்டனர். முன்பெல்லாம் அவர்கள் தரையில் அமர்ந்து பேசுவார்கள் இப்போது மடக்கு நாற்காலியில் அமர்ந்து இருந்தார்கள். மற்றபடி அதே அறையிலேயே சுவற்றில் ஒருஅலமாரி. அதில் தட்டுக்கள் நிறைய அறிவுமதி எழுதிய கவிதைகள்.
பைல்களில் அழகாகக் கோர்க்கப் பட்டு இருந்தது. மற்ற தட்டு நிறைய புத்தகங்கள்... ஆன்மிகம்-பக்திப்புத்தகங்கள்.. ஒன்றிரண்டு சோதிடப்புத்தகங்கள்.
அறிவுமதியின நாற்காலிக்கு முன் மட்டும் ஒரு டீபாய் இருந்தது. அதில் ஒரு ''ஆஸ்ட்ரே'' ஓய்வில்லாமல் சிகரெட் பிடிக்கும் பழக்கம் அவரை விட்டுப் போகவேயில்லை. இப்போது அவர் மிகவும் இருமவும் செய்தார்.

துரை பேச்சை ஆரம்பித்தான். ''இந்த சிகரெட்டை விட்டுவிடக் கூடாதா?'' என்றான். அறிவுமதி, ''முயற்சி செய்கிறேன்'' என்றார் எத்தனை வருஷமாக என்றான் கோபாலன். அவன் நகைச்சுவையாகப் பேசினாலும் யாரும் சிரிக்கவில்லை. ஏன் என்றால் அறிவுமதியின் முகத்தில் அப்படி ஒரு சோகம் கவ்வியிருந்தது.,

பின் அவரே பேச்சை தொடர்ந்தார்.'' நா நேரா விஷயத்துக்கு வந்துடறேன். நானும் சக்திபெருமாள் மாதிரி உங்களைவிட்டுப் பிரியப் போகிறேன். திண்டுக்கல் பக்கம் புதுப்பட்டிதான் என்றார் . அங்கிருந்து கொஞ்ச தூரம் நடக்கனும்.., அங்கே போயிடப் போறேன். வேலையை ராஜினாமா செய்துட்டேன் என்றார். ''ஏன்'-என்னாச்சு ..'' என்றான் துரை பதட்டமாக.

“அம்மாவுக்கு உடம்பு முடியலே.., வெவசாயம் பாக்கறதுக்கு ஆளில்லே. நான்தான் போயி அதைக் கவனிக்கனும். வருமானம் பெரீசா ஒன்னும் வந்துடாது. என்றாலும் போகப் போறேன்.”என்றார் கோபாலன்.“சரி .. அதுக்காக ஏன் இத்தனை சோகமா இருக்கீங்க . முகத்தைப் பார்க்க சகிக்கலே., என்னாச்சு ஒங்களுக்கு , எங்களையெல்லாம் பிரியற சோகமா? வேலையை ராஜினாமா பண்ணின வேதனையா?” என்றான்.

அறிவுமதி, “எல்லாம்தான்.” ஆனா எம்மனசிலே இன்னுமொரு வேதனை இருக்கு அது, அம்மா, அப்பாவோட ஊருலே போயி இருக்கறதிலே எனக்கு கஷ்டம் இல்லே இருந்துடுவேன் ஆனா சும்ம நச்சரிக்கிறாரு, அம்மா அழறா . என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றாங்க. பொண்ணு எல்லாம் பாக்குறாங்க. எனக்கு இஷ்டமே இல்லை என்றார்.

துரை “ஏன் கல்யாணம் பண்ணிக்கலே? . அங்கேயே பக்கத்திலே ஒரு வேலையைக் கூட தேடிக்கலாம் என்றான். அறிவுமதி, தயவுசெய்து அப்படி மட்டும் பேசாதீர்கள். எனக்கு அதிலே மனசு ஒப்பவே இல்லை. நான் துறவி... பிரம்மச்சாரிதான்.,அப்பாவும் அம்மாவும் சும்மா இருந்தால்தான் அவுங்க வவுத்துப் பாட்டுக்கு விவசாயம் பார்ப்பேன். ஏதோ கொஞ்சமாச்சும் காசு வேணுமே அதுக்காக. ரொம்பக் கட்டாயப்படுத்தினாங்கன்னா ஒரு நாள் அவங்ககிட்டே சொல்லாமே, யார்கிட்டேயும் சொல்லிக்காம, எங்கே போறேன்னு சொல்லிக்காமே- எங்காச்சும் ஓடிடுவேன். அது இமயமலைச்சாரலாயும் இருக்கலாம்; அடர்ந்த காடாயும் இருக்கலாம்;ஏதாச்சும் குக்கிராமமாயும் இருக்கலாம்; எந்த இடம்னு எனக்கே தெரியாது. எனக்கு “அந்த முருகனோட துணை ஒன்று போதும்”- என்றார்.

துரை “அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க.., ஊர்லே இருங்க..,?”உங்க ஓர் அட்ரசைக் கொடுங்க, அடிக்கடி நீங்க இங்கே வாங்க.நாங்களும் வர்றோம்... சந்திப்போம்..” என்றார். அதைப்பத்தியெல்லாம் ஒன்றும் தெரியாது ரொம்ப கட்டாயப் படுத்தினாங்கன்னா .. விலகறதுதான் ஒரே வழிஉங்க யாரோடவும் நான் தொடர்பு கொள்ள மாட்டேன். எங்கே இருக்கேன்னு சொல்ல மாட்டேன்... இதுதான் நாம கடைசியா சந்திக்கிறது. ஊர் அட்ரஸ் மட்டும் சொல்றேன். அங்கே நான் இருந்தா நான் இருந்தா பார்க்கலாம். இல்லேன்னா எல்லோருக்கும் வாழ்த்துக்கள். நாளைக்குக் காலைலே நான் ஊருக்குப் புறப்பட்டுவிடுவேன். இன்னைக்கு நைட்டே இதையெல்லாம் - பெட்டி படுக்கையேல்லாம் ‘பேக்’கூட பண்ணி, ரூமை வெகேட் பண்ணிடுவேன்” என்றார் .

நண்பர்கள் யாருக்கும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. அவர் ஒரு முடிவை எடுத்தால் எடுத்ததுதான்.- பின் யார் சொன்னாலும் கேட்க மாட்டான்.

அது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.கனத்த இதயத்துடன் நண்பர்கள் பிரிந்தார்கள்.

கிருஷ்ணகாந்த் மிகவும் வேதனைப்பட்டான். அன்றிரவு முழுக்கவும் அவன் தூங்கவில்லை.

# 9. புதியதோர் உலகைத் தேடி

வருடம் 1972, டிசம்பர் மாதம்.

கிருஷ்ணகாந்த் அன்று மிக மிக மகிழ்ச்சியுடனும் இருந்தான். ஆமாம்! அவனுக்கு சென்னையில் நல்ல கம்பெனி ஒன்றில் கணக்குப்பிரிவில் (Account Section) துணைமேலாளர் பணி கிடைத்திருந்தது., நான்கு இலக்க சம்பளம்.

அவன் தந்தை கோவிந்தராசனுக்கும், தாய் கோகிலவாணிக்கும், எல்லையில்லாத மகிழ்ச்சி. அவன் தாய் பூஜை அறையில் உட்கார்ந்து கொண்டு எல்லாத் தெய்வங்களையும் வணங்கிக் கொண்டிருந்தாள். அவனுக்கு வேலை கிடைத்த செய்தியை கோவிந்தராசன் திரும்பத் திரும்பப் படித்து மகிழ்ந்தார்.

கிருஷ்ணகாந்த் M.com முடித்து 6 மாதம் வேலையில்லாமல் வீட்டில் இருந்தான். துரை ஹைதராபாத் பக்கம் ஒரு மாதம் முன்புதான் வேலைக்குச் சேர்ந்தான். அவனுக்கும் ஒரு கம்பெனியில் அக்கவுண்ட்ஸ் பிரிவில் வேலை. கோபாலன் மத்திய அரசுப் பணியில் சேர்ந்து விட்டான் . அவன் கர்நாடகா போய் விட்டான். அவனுக்குக் கன்னடம் எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தது. ஹிந்தியும் படித்து இருந்தான்.டைப்ரைட்டிங் தமிழ். ஆங்கிலம் இரண்டிலும் ஹையர் பாஸ் செய்து இருந்தான். சார்ட் ஹேண்டும் தெரியும். அவன் இன்னும் பெரிய பதவிக்குப் போக வேண்டியவன். என்றாலும் மத்திய அரசு பணி என்றதும்., அதுவும் கெஜடட் பதவி என்றதும் போய் சேர்ந்து விட்டான்.

கண்ணன் டெல்லிக்குச் சென்றுவிட்டான். அவன்I.A.S கோச்சிங் வகுப்பில் சேர்ந்து விட்டான்.

கிருஷ்ணகாந்திற்கு இந்த வேலை,,? அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி,. இண்டர்வியூவில் (நேர்முக தேர்வு) அவனிடம் கல்லூரியீல் படித்த படிப்புக்களைவிட, அவன் விளையாட்டுக்களில் பெற்ற பரிசுகளைப் பற்றித்தான் நிறைய கேள்விகள் கேட்டார்கள்.அந்தக் கம்பெனியிலும் தனியாக கிரிக்கெட் டீம் உண்டு என்றும். அதிலும் அவன் திறமை இருந்தால் சேர்த்துக் கொள்ளப் படுவான் என்றும் கம்பெனிகளுக்கிடையே ஆன மாநில அளவிலான போட்டிகளிலும் கூட கலந்து கொள்ள வாய்ப்பு உண்டு எனவும் கூறியிருந்தார்கள்.

இப்போது அதே வேலை கிடைத்துவிட்டது. ., அவனுக்கு அந்தரத்தில் மிதப்பது போன்ற மகழ்ச்சி. அவனுக்குப் போல்ட்வால்ட் விளையாடத் தெரியும்., அதிலும் பரிசுகள் பெற்றவன். ஒரு குறிப்பிட்ட தூரத்தில் இருந்து, நிமிர்ந்த நிலையில். மூங்கில் கழி அல்லது பைபர் கிளாசிலான உயரமான

தடியை ஏந்தி வேகத்தைக் கூட்டிக் கொண்டே ஓடிவந்து, சரியான இலக்கில் தடியை ஊன்றி, அதை அழுத்தி, அந்த அழுத்தம் தரும் உந்து சக்தியில். தடி கொஞ்சம் வளைந்து கொடுக்க காற்றில் அப்படியே மேலே பறந்து, சரியான நேரத்தில் தடியை நழுவ விட்டு, குறுக்கே இருத்திவைக்கப்பட்டிருக்கும், மற்றொரு கழியை தொடாது, படுத்த நிலையில் கையை நீட்டி, முகத்தை குறுக்குத் தடிக்குக் காட்டி, அப்படியே உருண்டு சாய்ந்து – கீழே விரிக்கப்பட்டுள்ள மெத்தைகள் அல்லத மணலின் நடுப்பகுதியில் சாய்வது எத்தனை சுகம் என்று நினைத்துக் கொண்டான்அவன். அது போல் இப்போதும் உயர உயரப் பறப்பது போல் அவனுக்கு இருந்தது.

அந்த மகிழ்ச்சிய அவன் தனக்குள் மட்டும் வைத்துக் கொண்டிருக்க முடியுமா? நண்பர்கள் துரை, கோபாலன், அனைவருக்கும் தந்தி மூலம் தெரியப்படுத்தினான். அன்பு நம்பியின் விட்டிற்கு சென்று , அவனிடம் தகவல் கொடுத்தான். அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. “எங்கு சென்றாலும் என்னை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் - நீங்கள் எல்லோரும் நல்ல நண்பர்கள் என்றான். இப்போத அவர் ஒரு மார்க்சியவாதி. விவசாயத்துடன் அரசியலிலும் ஈடுபட்டு இருந்தார். இலக்கியமும் அவருக்கு ஒரு ஆர்வமாக இருந்தது. வார்டு கவுன்சிலராக ஆவதற்குக் கூட அவர் முயற்சிகள் மேற்கொண்டுவந்தார். திருமணமும் முடிந்து இருந்தது.

கிருஷ்ணகாந்த் பிறகு நேராக கல்லூரி கிரிக்கெட் டீம் கேப்டன் செபாஸ்டீன் வீட்டிற்குச் சென்றான். செபாஸ்டீன் வங்கி ஒன்றில் பணியில் அமர்ந்து இருந்தான். மாலை நேரம் ஆனதால் அவன் வீட்டில் இருந்தான்.

கிருஷ்ணகாந்தை பார்த்ததும் செபாஸ்டீன் “வாங்க - வாங்க,” என மனமகிழ்ச்சியுடன் வரவேற்றான்.” உட்காருங்க என்றான். பிறகு என்ன சாப்பிடுகிறீர்கள்? என்றார். பழரசமா, காபியா, டீயா என்றார். “ஒன்றும் வேண்டாம்” என்றான் கிருஷ்ணகாந்த். உள்ளே சென்று பிரிட்ஜில் இருந்து கொக்கோ – கோலா” டம்ளரில் ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தார். குடித்து முடிந்ததும் கிருஷ்ணகாந்த், தனக்கு வேலை கிடைத்துவிட்ட செய்தியை கூறினான்.

செபாஸ்டீன் எழுந்து நின்று விட்டார். கிருஷ்ணகாந்தின் கையை பிடித்து இறுக்கினார். சந்தோசம் - சந்தோசம் என்று கூறினார். என்னால் வாழ்க்கையில் உங்களையும் மறக்க முடியாது. உங்க கிரிக்கெட் விளையாட்டையும் மறக்கமுடியாது. உங்க பீல்டிங் ரொம்ப அபாரம். ரொம்ப சுறுசுறுப்பானவர் நீங்கள்., அதுவும் ‘கல்லி பொசிசன்’ உங்களுக்கு ஆ∴ப்ட்டான (பொருத்தமான) பொசிசன். அப்பா! எத்தனை கேட்சுகளை அங்கே எடுத்து

இருக்கிறீர்கள். அப்பா! எத்தனை கேட்சுகள். உங்க பீல்டிங் அபாரம் - அபாரம்'' என்றார்.

கிருஷ்ணகாந்திற்கு மெய்சிலிர்த்துவிட்டது. ஒன்றுமே பேசவில்லை அவன்..,பிறகு செபாஸ்டின் பேசினார். "இந்தியாவைப் பொறுத்தவரை இத்தனை நாள் நாம் மூணு பௌலர்களை – Spinnerer களைத்தான் மலைப் போல நம்பி இருந்தோம். இப்போ கவாஸ்கர் வந்து இருக்கார். நல்ல பீல்டர்.., சிலிப்பில் Excellency காட்டுகிறார். நல்ல பேட்ஸ்மேனும் கூட … என்றார்.

கிருஷ்ணகாந்த் "ஆமாம்" தாங்கள் சொல்வது சரிதான். பிறகு விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவனுக்கு காற்றில் மிதப்பது போல் இருந்தது.

# 10. வசந்தத்தில் ஓர் நாள்

வருடம் - 1974

"வசந்த மாளிகை ஒரு சோகரசம் ததும்பும் திரைப்படம்தான். – ஆனால் அது ஆழமான காதல் கதையையும் சொல்கிறது – காதலின் ஆழத்தையும் புரிய வைக்கிறது." துரையிடமிருந்து கிருஷ்ணகாந்திற்கு வந்த கடிதத்தில் இந்த வாசகங்கள் காணப்பட்டன.

கிருஷ்ணகாந்த் இப்போது சென்னையில் குடியேறி இருந்தான். அடுக்குமாடி வீட்டில் ஒரு Plot வாசம். அவனுடன் அவன் தந்தை கோவிந்தராசனும், அவன் தாய் கோகிலவாணியும் வந்துவிட்டனர். ஊரில் இருந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டார்கள்.

கோவிந்தராசன் பணியில் இருந்த ஓய்வு பெற்றுவிட்டார். இந்த இரண்டு அறை Plot ல் கொஞ்சம் நடுத்தரமான ஹாலில் கிருஷ்ணகாந்த் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். துரையின் கடிதம் அவனுக்குள் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தன. துரைக்கு வாழ்க்கையில் என்ன சோகம் நேர்ந்தது? ஹைதராபாத்தில் அவன் குடித்துப் பழகிவிட்டானா? சோகரசம் அது - இது என்றெல்லாம் கடிதம் எழுதுகிறானே - என்று யோசித்தான்.

கடிதத்தில் அதிக வரிகள் இல்லை – மேலே குறிப்பிட்ட வரிகள் முதல் பத்தியாக இருந்தது. இரண்டாவது பத்தியில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை கிருஷ்ணகாந்த் வீட்டிற்கு வருவதாக எழுதியிருந்தான். மற்றவை நேரில். வேறு செய்திகள் இல்லை. கிருஷ்ணகாந்திற்கு இந்த வரிகள் நிம்மதியைத் தந்தன,. எதுவென்றாலும் நேரில் பேசிக் கொள்ளலாம் எனப் பெருமூச்சுவிட்டான். ஞாயிற்றுக் கிழமை வர துரை குறிப்பிட்ட ஞாயிற்றுக் கிழமை வர இன்னும் இரண்டு மூன்று நாட்கள் இருந்தன.

சென்னையில் - பணியில் சேர்ந்து இரண்டு வருடங்கள் ஆன பின்பும் கிருஷ்ணகாந்தின் மனப்பாங்கில் பெரிய மாற்றங்கள் இல்லை . அலுவலகப் பணிப் போக அவனுக்கிருந்த பணிகள் ஒன்று கிரிக்கெட், மற்றொன்று சினிமா - இப்போது ஆங்கிலப்படங்கள் நிறையப் பார்க்க ஆரம்பித்து இருந்தான்.

இன்னொரு விஷயத்திலும் அவன் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டு இருந்தது. அவன் ஊரில் அவன் கல்லூரி நாட்களில் அவன் விளையாட்டுத் திறனை பயிற்சியின் மூலம்தான் வளர்த்துக் கொண்டான்., நண்பர்கள், மற்ற

விளையாட்டு வீரர்கள் செய்கின்ற விமர்சனங்கள் தான் வழி காட்டியாக இருந்தது.

இப்போது அப்படி அல்ல. ஒரு பயிற்சியாளரிடம் (Coach) அவன் முறைப்படி கிரிக்கெட் விளையாடும் திறனை மேம்படுத்திக் கொண்டு வந்தான். பாட்டீங், பீல்டிங் இரண்டிலும் அவன் மனதை ஒரு முகப்படுத்தினான். பௌலிங்கிலும், Spin பவுலில்தான் Practise செய்தான். இப்பவும் அவனுடைய பவுலிங்கில் அவன் குறிவைப்பது லெகிஸ்டிக்கைதான். இந்த மாதிரி பவுலிங் கொஞ்சம் ரிஸ்க் ஆனதுதான். பந்து பாட்ஸ்மேனின் இடதுபக்கத்தில் விழுந்து எம்பிட , வலது புறமாகத் திரும்ப வேண்டும். பந்து பிட்ச் ஆகின்ற இடம், பிட்ச் ஆன பிறகு ஆகின்ற நகர்வு, இவை பேட்ஸ்மேனுக்கு ஏமாற்றத்தைத் தர வேண்டும்.

பந்து Spin ஆகாமல், leg stickக்கு வெளியே நேராக விழுந்தால் பேட்ஸ்மேனுக்கு கொண்டாட்டம். பந்தை ஹூக் செய்தோ, pull செய்தோ deep square leg ற்கோ long legற்கோ பந்தை வேகமாக அனுப்பிவிடுவார். சிலசமயம் நன்றாகத் திருப்பிப் பந்தைlong leg ற்கு தள்ளி- fine leg பக்கம் அனுப்பி, ப்ந்தை காற்றில் பறக்கவிட்டு, சுலபமாக 4 ரன் எடுத்துவிடுவார். அங்கு ஒன்றிரண்டு பீல்டர்கள் இருந்து சரியாக கேட்ச் பிடித்தால்தான் பேட்ஸ்மேனுக்கு சிரமம். என்றாலும் கிருஷ்ணகாந்திற்கு இப்படிபட்ட பந்துகளை வீசுவதில் பிரியம் அதிகம் இருந்தது. , சமயத்தில் பந்து சரியாக – Turn ஆகி leg stickக்கை வீழ்த்தியது. பாட்டிங்கை பொறுத்த அளவில் அவன் பயிற்சியாளரிடம் டிரைவ் ஷாட்களை பழகிக் கொண்டிருந்தான். Cover drive , off drive ஆகிய இரண்டும் அவனுக்கு நன்கு பழக்கமாகி இருந்தன. On drive , straight drive - ம் அவன் ஏற்கனவே நன்கு தேர்ச்சி பெற்ற ஷாட்களாக இருந்தன.

பயிற்சியாளர் கிருஷ்ணகாந்திற்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகக் கூறி நிறைய நம்பிக்கைகளை ஊட்டிக் கொண்டிருந்தார்.

இச்சிந்தனைகள் அவனுக்குள் ஒருபக்கம் இருந்தாலும் அவன் நண்பன் துரையின் வருகையையும் ஒரு பக்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த ஞாயிற்றுக்கிழமை வந்தது. அந்த மாலை நேரத்தில் துரை, அவன் தாயார் மஞ்சுளாதேவி, தந்தை கோமதிநாதன், சகோதரி விசாலாட்சி ஆகியோர் கிருஷ்ணகாந்த் வீட்டிற்கு வந்தார்கள்.

ஹாலில் உட்கார்ந்து இருந்த கோவிந்தராசன் ‘வாங்க வாங்க’ என்று அவர்களை எழுந்து நின்று வரவேற்றார். சமயலறையிலிருந்து கோகிலவாணி வெளியே வந்து வாங்க என்று முகமலர வரவேற்றாள். கிருஷ்ணகாந்த் தன் அறையில் இருந்து வெளியே வந்து துரையை ஆரத்தழுவிக் கொண்டான். எத்தனை நாள் ஆச்சுடா உன்னைப்பார்த்து என்று சொன்னவனின் கண்ணில் நீர் திரையிட்டுக் கொண்டது.

அனைவரும் ஹாலில் அமர்ந்து கொண்டார்கள். கிருஷ்ணகாந்திற்கு பொறுமை இல்லை, அவனுக்குத் துரையின் சோகம் என்ன என்று தெரிந்து கொண்டுவிட வேண்டுமென்று மனது துடித்தது. அதே சமயம் துரையின் முகத்தில் அப்படி ஒன்றும் சோகம் தெரியவில்லை. ‘‘சரி-வா’’ நாம உள்ளே போகலாம் என்று தன் அறைக்குத் துரையை அழைத்தான் கிருஷ்ணகாந்த்,.

‘‘இல்லை -இங்கேயே பேசுவோம்’’ என்றான் துரை. கோமதிநாதன் எழுந்து நின்றுதன் கைப்பையிலிருந்து ஒரு திருமணப்பத்திரிகையை எடுத்துகோவிந்தராசனிடம் கொடுத்தார்.

ஆம்! அது திருமணப்பத்திரிகை, துரைக்குத் திருமணம்,.மணப்பெண் அவன் மாமன் மகள் விமலாவே ! அவன் காதலித்த விமலாவே; செய்தியைப் புரிந்து கொண்ட கிருஷ்ணகாந்திற்கு – மகிழ்ச்சிக்கு அளவே இல்லை,. துள்ளிக் குதிக்காத குறை.. ‘‘டே!நீ தங்கப்பதக்கத்தை வென்றுவிட்டாயடா’’என்றான் கிருஷ்ணகாந்த். ‘‘தங்கப்பதக்கம் சினிமாவை - கிருஷ்ணகாந்த் மூன்று தடவை பார்த்துவிட்டான். –‘‘ என்றார் கோவிந்தராசன். பிறகு இவனுக்கு இன்னும் சினிமாப் பைத்தியம் விடவேயில்லை என்றார் அனைவரும் சிரித்தனர்.

கிருஷ்ணகாந்த் அவன் தாயைப் பார்த்து, ‘‘அம்மா – ஏதாச்சு ஸ்வீட் செய்யம்மா’’ என்றான்,. ‘‘டே நீங்க எல்லோரும் நைட் சாப்பிட்டுட்டுத்தான் போகனும்,. பத்திரிகை நெறையப் பேருக்குத் தரனும்னு சொல்லிட்டு புறப்பட்டு விடக்கூடாது’’ என்றான்.

துரை ‘‘அதெல்லாம் இல்லை., இன்னிக்கு நைட் நாங்க எல்லோரும் உன் வீட்டிலேயேதான் தங்கப்போறோம். இனி நாளைக்கு காலைலேதான்

எங்க பயணம் தொடரும் ,. சிட்டியிலே எல்லா வேலையும் முடிஞ்சது.,'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம்டா'' என்றான், கிருஷ்ணகாந்த். பெண்கள் சமையல் அறைப்பக்கம் நகர்ந்தனர். கோவிந்தராசனும் , கோமதிநாயகமும் அமர்ந்து கொண்டனர். '' கோவிந்தராசன் கோகிலவாணியிடம், அவன் சொன்ன மாதிரி ஏதாவது ஸ்வீட் செய்'' என்றார். கோகிலவாணி''சரி'' என்றாள்.

நண்பர்கள் கிருஷ்ணகாந்தும், துரையும் கிருஷ்ணகாந்தின் அறையில் அமர்ந்து பேசத்துவங்கினர். ஒரு காதல் கனிந்து வந்த நிலை. அவர்களிடையே பேச்சுக்கு என்ன பஞ்சம்?

# 11 . இதற்கு மேல் இலக்கியத்தில் ஒரு வாக்கியம் இல்லை.

வருடம் - 1994.

துரையும், அவன் பெற்றோரும் வந்துவிட்டுச் சென்று இரண்டு மாதத்திற்கு மேல் ஓடிவிட்டது.துரையின் திருமணமும் நடந்து முடிந்து விட்டிருந்தது.துரையைப் போலவே கோபாலனும் ஒருநாள் வீட்டிற்கு வந்து திருமணப்பத்திரிகை கொடுத்து விட்டுப் போயிருந்தான். கண்ணனுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கோபாலனும் கண்ணனும் ஒருசமயம் அறிவுமதியின் அறையில் அமர்ந்து கொண்டு தங்களுக்கு காதலிமார் இருப்பதாக சொன்னதெல்லாம் சுத்தப் பொய். – வெறும் கற்பனை.உண்மையிலேயே அவர்கள் கூறிய மாதிரி நபர்கள் உலகிலேயே பிறக்கவில்லை. அவர்கள் பொய் கூறியிருக்கிறார்கள் என்று தெரிந்தும், கிருஷ்ணகாந்தும், துரை, அறிவுமதி, சக்திப்பெருமாளும் அதை ஒரு பொருட்டாகவே எடுத்தக் கொள்ளவேயில்லை. எல்லோரும் அதை ஒரு விளையாட்டாகவே எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் அந்த ஊரில் இருந்தபோதே இந்த செய்தி வெளியாகிவிட்டது.

துரையைப் பொறுத்த அளவில் அவன் சொன்னது நிஜம். அதை வெற்றியாக்கிக் காட்டி விட்டான் அவன். அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட கிருஷ்ணகாந்த் வீட்டில் இருப்பது வெகு அபூர்வம். மைதானமே கதி. அல்லது ஏதாவது தியேட்டர்,அல்லது ஏதாவது புதிய நண்பர்கள் -அலுவலக நண்பர்கள் வீடு அரட்டை செய்தித் தாள்களைக்ளள கூட ஆழ்ந்து படிக்கும் பழக்கம் அவனிடம் இல்லை..,

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி இருக்கும். கிருஷ்ணகாந்த்திற்கு அன்று எங்கும் வெளியில் போகும் திட்டம் இல்லாத காரணத்தினால், தன் அறையில் குளித்துவிட்டு வந்து, மெத்தையில் உயரமாகத் தலையனைகள் வைத்துக் கொண்டு, சாய்ந்த படுத்தவாறு - டிரான்சிஸ்டர் ரேடியோவில் சினிமாப் பாடல்கள் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஹாலில் கோவிந்தராசனும் கோகிலவாணியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். கோகிலவாணி –“அவனை கேட்டிடுவோம், அவனை கூப்பிடுங்க.. கிருஷ்ணகாந்தைக் கூப்பிடுங்க .,என்றாள்” . கோவிந்தராசன் “கிருஷ்ணகாந்த் -இங்கே வாடா!” என்று கூப்பிட்டார். என்னம்மா? என்று கேட்டுக் கொண்டே கிருஷ்ணகாந்த் எதிரில் அமர்ந்தான்.

“ஒன்றுமில்லே.., உனக்கு நெறைய ஜாதகம் வருது. உனக்குப் பெண் பார்க்கலாம்னு இருக்கோம்..” என்ன சொல்றே என்றார். கிருஷ்ணகாந்த்

தலையை குனிந்து கொண்டான். "ஏன் தலையை குனியறே? உன் மனசுலே என்ன இருக்கு சொல்லு.....! என்றார்". கிருஷ்ணகாந்த் தலையை குனிந்து கொண்டான். "ஏன் தலையை குனியறே" உம் மனசுலே என்ன இருக்கு சொல்லு..,

கிருஷ்ணகாந்த் அதற்கும் பதில் பேசவில்லை. உனக்கும் வயசு ஆயிட்டே போகுதுப்பா., உம் பிரண்ட்ஸ்க்கு எல்லாம் ஒவ்வொருத்தருக்கா கல்யாணம் ஆகுது..! இல்லையா?எங்களுக்கும் ஆசை இருக்குல்லே!" என்றார்.

கிருஷ்ணகாந்த் " அது வந்துப்பா என் மனசுலே ஒரு எண்ணம் இருக்குப்பா...? என்றார். உடனே கோவிந்தராசன் "என்ன? உனக்கும் காதலா? நீயும் காதலிக்கிறயா?" என்றார் சற்று அதிர்ச்சி அடைந்தவர் போல.

கிருஷ்ணகாந்த் எனக்கு ஒரு இஷ்டம் இருக்கு., மதுரையிலே செண்பகம் அத்தை இருக்காங்க இல்லையா? அவுங்க மக கல்யாணிய எனக்கு பிடிச்சுருக்குப்பா., என்றான்., உடனே கோவிந்தராசன் இடைமறித்தார். அவளுக்கு? என்றார்.

கிருஷ்ணகாந்த் - "இன்னும் நான் அவகிட்டே இதைப்பத்தி எதுவுமே பேசலை. எம்மனசுலே அவமேலே ஏதோ ஒரு admiration இருக்கு அதான் சொன்னேன" என்றான்.

கோவிந்தராசன் சிரித்துவிட்டார். "டே! அவ ஒனக்கு முறைப்பொண்ணுடா. செண்பகம் எனக்கு தங்கச்சி முறை ஆகணும், என்றார். பின் "இந்த விஷயம் துரை மூலமா என் காதிலே அரசல் புரசலா விழுந்தது. கோகிலவாணியும் சிரித்தாள். இனிப் போய் இவன்கிட்டே பேசிட்டு.. அடுத்தது என்ன செய்யலாம் -? அதை அவங்கிட்டேயே கேளுங்க..," என்றாள்.

கோவிந்தராசன் ,. "இப்ப என்ன செய்யலாம்னு சொல்லு" என்றார். கிருஷ்ணகாந்த் நீங்க போய் அத்தை மாமாவை ஒரு பேச்சு கேட்டுடிங்க – ஒரு பேச்சு கேட்டுடங்கப்பா ?" என்று கூறிவிட்டு எழுந்து நின்றான்.

"உட்காருடா" என்று அவன் கையைப்பிடித்து உட்கார வைத்துவிட்டார் கோவிந்தராசன். கோகிலவாணி "உன் அத்தையும் மாமாவும் என்ன சொல்லப் போறாங்க........ சரி நாங்க நாளைக்கே மதுரைக்கு போயி கல்யாண தேதி குறித்துவிட்டு வருகிறோம். என்னங்க நீங்க போயி மதுரைக்கு ரயில் டிக்கட் ரிசர்வ் பண்ணுங்க ... சுபம் சீக்கிரம்.." என்றான்.

“சரிம்மா” அப்படியே செய்யுங்க - ! என்று சொல்லிவிட்டு, கிருஷ்ணகாந்த் எழுந்து விட்டான்” இந்த முறை கோவிந்தராசன் அதை தடுக்கவில்லை.

அடுத்த நாள் கோவிந்தராசனனும், கோகிலவாணியும் மதுரைக்கு புறப்பட்டுவிட்டார்கள்.

கிருஷ்ணகாந்த் மனதில் புதிய உற்சாகம் கரை புரண்டு கொண்டு இருந்தது. துரையைப் போலவே தனக்கும்.. இஷ்டப்படியான வாழ்வு, கைநிறைய சம்பளம் உள்ள வேலை –நல்ல நட்பு வட்டம் - கிரிக்கெட் சொல்லித் தர நல்ல ‘கோட்ச்’ விளையாட நல்ல வாய்ப்புக்கள் - என்ன குறை தனக்கு – என எண்ணிக்கொண்டான் அவன்…

தொலைபேசி மூலம் தாங்கள் மதுரை வருவதை முன்கூட்டியே செண்பகத்திற்கும் அவள் கணவன் பச்சையப்பனுக்கும், முன்கூட்டியே தெரிவித்து இருந்தார் கோவிந்தராசன்.

செண்பகத்தின் வீட்டில், அந்த முன்னிரவு நேரம் அனைவரும் அமர்ந்து பேச ஆரம்பித்தார்கள். “சொல்லுங்க” கோவிந்தராசன் எல்லோரும் சௌக்கியம்தானே ?”என்று ஆரம்பித்தார் பச்சையப்பன்.

கொஞ்ச நேரம் அதையும் , இதையும் பேசிவிட்டு கோவிந்தராசன் கிருஷ்ணகாந்தின் மனவிரப்பத்தை தெரிவித்தார். “என்ன செண்பகம் -! அவனுக்கு இஷ்டம், உங்க முடிவு என்ன சொல்லுங்க…” என்று நேரிடையாகவே கேட்டவிட்டார் கோவிந்தராசன்” செண்பகம்.. ஆத வந்து அண்ணா நாங்க அவளுக்கு வேற இடத்தில் பார்த்துட்டு இருக்கிறோம். .. அதுதான்…” என்று தயங்கினாள் .உடனே பச்சையப்பன் - , அதனாலென்ன? நிச்சயமா பண்ணிட்டோம்? பேச்சுவார்த்தை கூட இன்னும் பேசலை.. வந்த பார்த்துட்டு போயிருக்காங்க.. அவ்வளவுதானே, நம்ம ஒறவு முறைக்காரங்க கேட்கும்போது நாமளும் யோசிக்கனும்’’. எனக்கு இது சந்தோசமாத்தான் இருக்கு-என்றார். “செண்பகம் உங்களுக்கு சந்தோசம்னா –எனக்கும் சந்தோசம்தான் . அவகிட்டேயும், கல்யாணிகிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டிடலாம்னு…”

கேட்கச்சொல்லுங்க..என்றுகோவிந்தராசன் புறப்பட்டுவிட்டார். செண்பகம் “இருங்கண்ணா. டிபன் எல்லாம் ரெடி பண்ணியாச்சு.. ரா தங்கிட்டு போகலாம்-” என்றாள். “இல்லம்மா – அது வேண்டாம் …” என்றார் கோவிந்தராசன். பின்” செண்பகம்-.. கல்யாணி வீட்டிலேதானே இருக்கா .. இப்ப அவளை கேட்ட சொல்லிடு – தப்பில்லே.. “ என்றார். பச்சையப்பன் “செண்பகம் -போய் அவளை

கேட்டுட்டு வா என்றார். கல்யாணி அவள் அறையில் அமர்ந்து இருந்தாள். ஹாலிலே எல்லாரும் உட்கார்ந்து பேசுவது அவள் காதிலேயும் விழுந்து கொண்டுதான் இருந்தது. அவளிடம் சென்ற செண்பகம், கிருஷ்ணகாந்தின் விருப்பம், கோவிந்தராசனும், கோகிலவாணியும் வந்த இருக்கிற நோக்கம் எல்லாவற்றையும் அமைதியாக சொன்னாள்.

கல்யாணி- “இல்லேம்மா நான் அப்படி நெனைக்கலே கிருஷ்ணகாந்த், மாமா, அத்தை –எல்லார்கிட்டேயும், மதிப்பு, மரியாதை எல்லாம் உண்டு ஆனா கிருஷ்ணகாந்தை கல்யாணம் பண்ணிக்க எனக்கு இஷ்டம் இல்லே…, என்றாள். செண்பகம் கொஞ்சம் அமைதியானாள்…“அந்த வரன் வந்து பெண் பார்த்துட்டாங்க- அதனாலே சொல்றியா? காரணம் கேட்பான் கோவிந்தராசன் நான் சொல்லனும் இல்லியா? என்ன சொல்றது? என்றாள் செண்பகம்.

“அம்மா- நீங்கள் யாரைப் பார்த்து முடிவு செய்தாலும் சம்மதம்தான்.. ஆனா சொந்தத்திலே கல்யாணம் பண்ணிக்கிறதிலே எனக்கு இஷ்டமில்லே …. இந்தக் காரணத்தை சொல்லிடுங்க -” என்றாள்.

‘படித்தவள் ஒரு கல்லூரி பேராசிரியையாக பணி புரிபவள். எல்லாம் தெரிந்தவள். இனி அவளிடம் போய் என்ன பேசிட முடியும்.?” என்று யோசித்தாள் செண்பகம்…“சரி- உன் இஷ்டம்-” என்று சொல்லிவிட்டு வந்துவிட்டாள்.

கோவிந்தராசனிடம் அவளுக்கு சொந்தத்திலே கல்யாணம் பண்ணிக்கிறதிலே இஷ்டமில்லேன்னு சொல்லிட்டா.. மத்தபடி எங்க எல்லோர் மேலேயும் ரொம்ப மரியாதை வச்சிருக்கா அண்ணா… தப்பா நெனைச்சுக்காதீங்க….” என்றாள்.

கோவிந்தராசன் அமைதியானார்..”சரி வெளிப்படையா பேசினா தப்பில்லே… நாங்க புறப்படுகிறோம்…” என்று எழுந்து விட்டார், கோகிலவாணியும் எழுந்து விட்டாள். சாப்பிட்டுவிட்டு போலாம் கோவிந்தராசன் - நமக்குள் என்ன ? என்றார் பச்சையப்பன்.

கை நனைக்கவில்லை கோவிந்தராசன்.. மனவேதனையிடன் இரவே சென்னைக்கு பயணமானார்கள் இருவரும்.

## 12. இதயம் இருக்கிறதே.. இதயம் இருக்கிறதே..

வருடம் 1974.

கோவிந்தராசன் தன்மகனிடம், கல்யாணியின் முடிவை தயங்கி தயங்கி கூறிவிட்டார் “ சொந்தத்திலே கல்யாணம் பண்ணினா பொறக்கபோற குழந்தை ஆரோக்கியமா இருக்காதுன்னு அவ சொல்றா. மற்றபடி உம்மேலே நல்ல மரியாதையும், மதிப்பும் இருக்கு... என்ன செய்யறது சொல்லு? என்றார்... கோகிலவாணி –“நா என்ன சொல்லறதுன்னே எனக்குத் தெரியலே- நீ மனசை விட்டுடாதே ... உன் மனதுக்குள்ளே கோட்டை கட்டிட்டு.... சும்மா இருந்துட்டியே.. இத்தனைப்படிச்சவன் நீ....!” என்றாள்

கிருஷ்ணகாந்த் அமைதியாக இருந்தான்... இட் இஸ் O.K என்று மட்டும் பதில் சொன்னான். வேறு ஒன்றுமே பதில் பேசவில்லை.

வழக்கம்போல கிருஷ்ணகாந்த் அலுவலகம் சென்றான். நெஞ்சினிலே ஏதோ ஒன்று அடைப்பது போல இருந்தது. அவனுக்கு இதயம் கனத்தது... மேலும். அறிவுமதியின் அறையில் மாலை சந்திப்புகளின் போது எப்போதாவது ஒருமுறை சிகரெட் படிக்கும் பழக்கம் கிருஷ்ணகாந்த்திற்கு இருந்தது. அலுவலகம் போகும்போது வழியில் ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கிக் கொண்டு, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். அலுவலகத்தில் அவனுக்கு வேலை ஓடவேயில்லை . தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்ட விட்டோமா! என்று அவனுக்குள் கேள்விகள் எழுந்து கொண்டே இருந்தது- பல வருடங்களுக்கு முன் அவன் மனதில் பதிந்திருந்த எண்ணங்கள். ஒரு வேளை முதலிலேயே கல்யாணியிடம் தன் எண்ணத்தை தெரிவித்து இருந்தால் அவள் சம்மதித்திருப்பாளோ என்று தோன்றியது.

நாளாக.. நாளாக.. கிருஷ்ணகாந்த்தின் துயரம் அதிகரித்தது. அலுவலக பணியை செய்வதில்கூட சிறு சிறு தடுமாற்றங்கள் ஏற்பட்டன. “என்ன ஆச்சு உங்களுக்கு? என்று பொது மேலாளர் கோவர்த்தனம் கேட்டுவிட்டார். ஒருநாள் அலுவலகம் முடிந்த எல்லோரும் போன பின் அவனை தனியே அழைத்து “What is wrong with you? – கொஞ்சம் தடுமாற்றம் தெரிகிறது.என்றார் அவர். கிருஷ்ணகாந்த் அவரிடம் எந்த விளக்கமும் சொல்லவில்லை. ஒன்றுமில்லை நான் கரெக்ட் செய்து கொள்கிறேன் என்றான்...”

கிரிக்கெட் விளையாடப் போவதை நிறுத்திவிட்டான். டேப்ரிக்கார்டில் பழைய சோகப் பாடல்களை திருப்ப திரும்ப கேட்டான். சிகரெட் நிறைய குடிக்க ஆரம்பித்துவிட்டான்.

மகனின் போக்கை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தார் கோவிந்தராசன். கோகிலவாணி அதற்கு மேல் கவனிக்க ஆரம்பித்துவிட்டாள்.. அவன் கொஞ்ச நேரம் அலுவலகத்தில் இருந்து தாமதமாக வந்துவிட்டால், உள்ளம் பதைக்க ஆரம்பித்துவிடும் அவளுக்கு, முகம் சோர்ந்து, வாடியும் போனான் கிருஷ்ணகாந்த். .. அவன் என்னதான் துயரங்களை மறக்க நினைத்தாலும், அவன் முகம் அவன் மனதைக் காட்டிக் கொடுத்துக் கொண்டே இருந்தது. " ஏன் -கிரிக்கெட் பயிற்சிக்கு வரவில்லை? என் பயிற்சியாளர் சாந்தமூர்த்தி தொலைபேசியில் கேட்டார்... "ஓடம்பு சரியில்லை : ஒரு மாதம் ரெஸ்ட் வேணும்" என்று சொல்லிவிட்டான் கிருஷ்ணகாந்த். அலுவலக நண்பர்கள் யார் கேட்டாலும், உடல் நலம் சரியில்லை என்கிற பதிலைத் தவிற வேறு ஒன்றும் சொல்லவில்லை அவன்.

மீண்டும் ஒரு ஞாயிற்றுக் கிழமை வந்தது. முற்பகல் நேரம். கிருஷ்ணகாந்த் எங்கும் வெளியே போகவில்லை. தன் அறையில் அடைந்து கிடந்தான். டேப்ரிக்கார்டர் மெதுவாக சோகப்பாடல்களை ஒலித்துக் கொண்டிருந்தது. சில சமயங்களில் தனிமையில் இருக்கும்போது – அவன் கண்களில் நீர் இலேசாக வழியத் துவங்கியது.

தன் வீட்டிற்குள்ளேயே, தன் அறைக்குள்ளேயே சிகரெட் பிடிக்க ஆரம்பித்துவிட்டான் கிருஷ்ணகாந்த். அவன் தன் அறையில் சிகரெட் பிடிப்பது ஹாலில் அமர்ந்து இருந்த கோவிந்தராசனுக்கு தெரிந்தது. கோசிலவாணிக்கு புரிந்துவிட்டது. வாசம் காட்டிக் கொடுத்துவிட்டது.

கோசிலவாணி , கோவிந்தராசன் அருகில் வந்தாள்.என்னங்க! .. பையன் இப்படி போயிட்டு இருக்கான். ஒரு துக்கம் தெரியாம வளர்ந்த பிள்ளை அவன்" சிகரெட் ஊதித் தள்ளறான். அவன் கையிலே காசும் நெறைய பொழங்குது. சம்பாதிக்கிற பிள்ளை –குடிச்சு, கிடுச்சு பழகிடப் போறான்.. பயம்மா இருக்குங்க..." என்றாள்.

கோவிந்தராசன் ஆழமாக யோசித்தார். கோசிலவாணி –"அவனுக்கு சீக்கிரமா ஒருகல்யானம் பண்ணிடனும்..." என்றாள்" கொஞ்சம் பொறு.." என்றார் கோவிந்தராசன்.

மகனாக தன் அறையை விட்டு வரும் வரையில் அவனை தொல்லை படுத்த வேண்டாம் என்று அமைதியாக இருந்தார்... அரை மணி நேரம் கழித்து தன் அறையை விட்டு கிருஷ்ணகாந்த் வெளியே வந்தான்.

“இங்கே வா” இப்படி உட்கார் என்றார் கோவிந்தராசன்.”“எதிரே இருந்த நாற்காலியில் கிருஷ்ணகாந்த்.. கோவிந்தராசன், ஒன்னைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும்.. கல்யாணியை மறந்துவிடு…..” என்றார்.தலையை அசைத்தான் கிருஷ்ணகாந்த், “ சிகரெட் குடிப்பதை விட்டுவிடு…” என்றார். தலையை குனிந்து கொண்டான் கிருஷ்ணகாந்த்.

வாழ்க்கை இதோட முடிஞ்சடலே கிருஷ்ணகாந்த் .. உனக்கு நெறைய எதிர்காலம் இருக்கு… உன் மனசை நீதானே மாத்திக்கனும். அதுக்கும் உன் மனசைத்தான் பயன்படுத்தனும். நாம நெனைச்சது ஒன்னு நடக்கலேன்னா – அதை மறந்துடனும்.. அப்பத்தான் வாழ்க்கை சுலபமா இருக்கும் நாங்க ரெண்டு பேரும் இருக்கோம் இல்லியா? நாங்களும் சந்தோஷமா இருக்கனும் இல்லியா? என்றான்.

## 13. எதையும் தாங்கும் இதயம் இருந்தால்..

வருடம் 1974

திருச்சியில் ஒரு கல்யாணமண்டபம். கொஞ்சம் பெரிதான மண்டபம்., மண்டபத்தின் காம்பவுண்டுக்குள்ளும், மண்டபத்தை ஒட்டிய சந்திற்குள்ளும் சில கார்கள் அணி வகுத்து நின்றன.உள்ளே தடபுடலான கல்யாண ஏற்பாடுகள். கொஞ்சம் பணக்காரத்தனம் திருமண ஏற்பாடுகள் ஒவ்வொன்றிலும் தெரிந்தது.

கோபாலனுக்கு திருமணம்.. மணமகள் பெயர் சங்கீதா. திருச்சியை சேர்ந்தவள். அதனால் திருச்சியில் கோபாலனுக்கு கல்யாணம்.கோபாலன் கர்நாடகாவில் மைசூர் நகரில் பணிபுரிந்து கொண்டிருந்தான்.

திருமணத்திற்கு கிருஷ்ணகாந்த், துரை, கண்ணன் ஆகியோர் வந்து இருந்தனர். கண்ணன் டெல்லி சென்று I.A.S பயிற்சி எடுத்துக் கொண்டவன். தேர்வில் வெற்றி பெறவில்லை.என்றாலும் ஒரு தனியார் கம்பெனியில் நல்ல வேலையில் அமர்ந்துவிட்டான். டெல்லியில் வேலை. அவன் கோபாலன் திருமணத்திற்காக விமானத்தில் வந்து இருந்தான். இந்த நான்கு நண்பர்களிடைய கடித போக்குவரத்தும். தொலைபேசி பேச்சுகளும் தொடர்ந்து கொண்டிருந்தன. திருமணத்திற்கு சக்தி பெருமாளும், அறிவுமதியும் வந்து இருந்தனர் சக்தி பெருமாள் சேலத்தில் தன் தையல் கடையை விரிவுபடுத்தி இருந்தார்.துரையின் திருமணத்திற்கு அவரால் வரமுடியவில்லை. ஏதோ குடும்ப அலுவல்கள் இருந்தன.

அறிவுமதி திண்டுக்கல் பக்கம் விவசாயம் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய தந்தைக்கு உடல்நலம் சரியில்லை. எனவே அவரும் துரையின்திருமணத்திற்கு வரவில்லை.இப்போது வந்து இருந்தார். அவர் திருமணம் செய்து கொள்ளவேயில்லை.. கோபாலன் அன்புநம்பிக்கு திருமண பத்திரிகை அனுப்பியிருந்தான். அவருக்கு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கூட்டங்கள் இருந்ததால் வர இயலவில்லை. இப்போது அவர் ஊர் ஊராக போய் மேடைகளில் பேசுகின்ற சிந்தனைப் பேச்சாளர். இடது சாரி இயக்கத்தில் பற்று உடையவர்.

விசுவநாதனுக்கு பத்திரிகை அனுப்ப கோபாலன் எவ்வளவோ முயன்றார்.. ஆனால் அவர் முகவரியே கிடைக்கவில்லை. தொடர்பே இல்லாமல் போய்விட்டது.

திருமணத்திற்கு நல்ல கூட்டம். சங்கீதாவின் தந்தை நல்ல வசதியுள்ளவர். உறவினர், நண்பர், உடன்பணியாற்றுவோர், அக்கம்பக்கத்தினர் என்று அனைவரும் திரண்டு வந்திருந்தனர்.

முகூர்த்தம் முடிந்துவிட்டது. நண்பர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மதிய விருந்தும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது. நண்பர்கள் உணவு அருந்தி முடிந்துவிட்டு இருந்தனர். இனி – அவரவருடைய ஊருக்கு புறப்பட வேண்டிய நேரம்.

கோபாலன் நண்பர்கள் தங்குவதற்கு ஒரு லாட்ஜில் அறைகள் ஏற்பாடு செய்த இருந்தான். ~~லாட்ஜுக்கு புறப்பட வேண்டிய நேரம்.~~

லாட்ஜுக்கு புறப்பட வேண்டிய நேரம். கிருஷ்ணகாந்த், துரையிடம் மெல்ல பேச்சை துவக்கினான்…"ஓங்ககூட எல்லாம் நான் கொஞ்சம் பேசனும்…" என்றான். "ஓ – பேசலாமே" என்றான் துரை. என்ன விஷயம் சொல்லு என்றான் கண்ணன். சொல்லுங்க-!" என்றார்கள் அறிவுமதியும் சக்திபெருமாளும்.

கல்யாணி தன்னை திருமணம் செய்ய மறுத்த செய்தியை கிருஷ்ணகாந்த், தொலைபேசி. கடிதங்கள் மூலமாக தெரிவிக்கவில்லை..தனக்குள்ளே வைத்துக் கொண்டான் இப்போது பேச வேண்டிய நேரம்..

"இங்கே வேண்டாம். லாட்ஜுக்கு சென்று அமர்ந்து பேசுவோம்,என்றான் கிருஷ்ணகாந்த், "சரி" என்றார்கள் நண்பர்கள்.

கோபாலைத் தவிர – மற்றநண்பர்கள் அனைவரும் - அந்த "வசந்தம்" என்கிற லாட்ஜில், அறை எண் 8ல் ஒன்று கூடினர். அது இருவர் தங்கக்கூடிய அறை .. ஐந்து நண்பர்கள் கட்டிலிலும், நாற்காலியிலுமாக உட்கார்ந்து கொண்டனர்.கிருஷ்ணகாந்த், அமைதியாக கல்யாணி தன்னை திருமணம் செய்து கொள்ள மறுத்ததை சொன்னான். அவன் முகத்தில் சோகத்தின் ராகம் தாண்டவம் ஆடியது. துரை எனக்கு இந்த சந்தேகம் வந்ததடா. உன் காதல் ஒருதலை காதல். அதனால்தான் உன் அப்பாவிடம் நானே இதுபற்றி பேசிவிட்டு போனேன், என்றான். கண்ணனுக்கு கோபம் வந்துவிட்டது…"இப்படியா நீ உன் மனசிலே நீயாகவே கற்பனை வளர்த்துக் கொள்வது. … அடப் போடா?" என்றான்.

சக்திப்பெருமாள் கொஞ்சம் அமைதிப்படுத்தினான். "சரி–விடுங்கள்" கிருஷ்ணகாந்த் . உங்களுக்கு இப்ப என்ன குறை? நல்ல வேலை இல்லியா? கைநிறைய சம்பளம் இல்லியா. அந்த வியஷயத்தை இப்படியே மறந்துடுங்க. சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்குங்க எல்லாம் சரியாகிவிடும். துரையும் கோபப்பட ஆரம்பித்தான்."மனசு- என்னடா பெரிய மனசு; வேணும்னா எங்ககூட ஹைதராபாத்திறிகு வா (திருமணத்திற்கு அவன் மனைவியும்

வந்திருந்தார்கள்). அப்படியே சார்மினார், அது,இதுன்னு சுத்துவோம் எல்லாம் சரியா போயிடும் என்றான்.

அறிவுமதி உடனடியாக ஒன்றும் பேசிவிடவில்லை. கொஞ்சம் அமைதியாக இருந்தார்., பின் யாரும் கிருஷ்ணகாந்தை ஒன்றும் சொல்லாதீங்க …? என்றார் கிருஷ்ணகாந் தைப் பார்த்து -"“கிருஷ்ணகாந்த் உங்களுக்கு ஒன்றும் ஆகாது.. ஒங்க வாழ்க்கை நன்றாக இருக்கும்…." என்றார்.

பிறகு அமைதியானார். பின் அவரே பேச ஆரம்பித்தார்-" யாராக இருந்தாலும் மொதல்லே தன்னைத்தான் நேசிக்கனும்.. தன்னை யாரும் வெறுத்துக் கொள்ளக் கூடாது .. அன்பினிலே இது ஆழமான வேர்…இது ஆணவமோ அகந்தையோ அல்ல.

கிருஷ்ணகாந்த் ஒங்க வாழ்க்கையை நெனைச்சுப் பாருங்க – ஒங்க எதிர்காலத்தைப் பற்றி நெனைச்சுப்பாருங்க.. அது போதும் நீங்க மாறிடுவீங்க… பழையபடி கிரிக்கெட் விளையாடப்போங்க… ஆபீஸ் வேலையை ஆர்வமா செய்யுங்க. எல்லாம் சரியாகிவிடும். “முருகன் துணை உங்களுக்கு எப்போதும் உண்டு" என்றார்..

பிறகு யாரும் பேசவில்லை, துறவறம் பேசும் அறிவுமதியின் பேச்சில் எதோ ஆழம் இருப்பதாக கிருஷ்ணகாந்திற்கு பட்டது.. அவன் கொஞ்சம் அமைதியானான்

நண்பர்கள் பிரிந்து கொண்டிருந்தான்.

## 14. எந்த நேரமும் நின்றனைப் போற்றுவோம்!

வருடம் -1975

அதுவும் ஒரு ஜூலை மாதம், சிறுநகர் -அந்த சிற்றூரில், கிருஷ்ணகாந்த் பிறந்து வளர்ந்து – பால்ய காலத்தை கழித்த அந்த சிற்றூரில், மேற்றிசைக் காற்று கீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்தகணவாய்களின் வழியே,எருமைகளை போன்ற மேகங்கள் வான வீதியில் மிதந்து கொண்டு இருந்தன.

அந்த ஊரிலே அமைந்த அந்த எழிலார்ந்த திருமணமண்டபத்தில் ~~சிற்றூரில்~~

கிருஷ்ணகாந்த் - மணமகனாக அமர்ந்து இருந்தார். மணமகள் சௌதாமினி , அதே ஊரைச் சேர்ந்தவள். எவ்வாறோ சௌதாமணியின் தந்தை மயூரநாதன் - கோவிந்தராசனுக்கு அறிமுகம் ஆனவர். ஒரு தரகர் மூலம், அவரக்கு பெண் இருப்பதை அறிந்த கோவிந்தராசன், இன்னொருநண்பர் முத்துமாணிக்கத்தின் மூலம் அவரை அணுகி – நல்லன பேசி கிருஷ்ணகாந்திற்கு திருமண ஏற்பாடுகள் செய்துவிட்டார்.

கோபாலனின் திருமணத்திற்குப் பின் நண்பர்கள் துரை, கண்ணன், சக்திபெருமாள், அறிவுமதி அனைவரும் - கிருஷ்ணகாந்துடன் கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டார்கள். தொலைபேசியில் பேசினார்கள். அவன் திருமணம் செண்து கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள்....

அவனும் இரண்ட மாத காலத்தில் தன் மனமாற்றத்தை சொல்லி விட்டான். பெண் தேடம் படலம் தொடங்கி ஆறு மாதம் கழித்தே ஒரு பெண் அமைந்தாள்.

அவள் சௌதாமினி .. சௌதாமினி பட்டப்படிப்பு படித்தவள்.இயற்பில் படித்தவள். கிருஷ்ணகாந்திற்கும் சௌதாமணிக்கும் உருவ ஒற்றுமையில் அப்படி ஒரு ஜோடிப் பொருத்தம் அமைந்து இருந்தது.. உயரம், நிறம், உடல்வாகு எல்லாமே காண்போர் கண்ணை கவர்ந்தது.

எங்கும் மங்கல நாதம்; மேளங்கள் முழங்க, உறவினர்கள் பூ மழை தூவ சிறுவர்கள் கரகோஷம் செய்ய, வயதில் மூத்தவர்கள், மெல்ல எழுந்து வந்து வாழ்த்துக் கூற சௌதாமணிக்கு மங்கலநாண் அணிவித்தான் கிருஷ்ணகாந்த்.. எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. ..

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து... மணச்சடங்குகள் ஒவ்வொன்றாக நிறைவேற... மகிழ்ச்சியின் வெள்ளம்.

நண்பர்கள் துரை, கண்ணன், கோபாலன், சக்திபெருமாள், அறிவுமதி, அன்புநம்பி அனைவரும் மீண்டும் ஒன்று கூடினர்.. விசுவநாதனைப் பற்றித்தான் தகவல் எதுவுமில்லை.

துரை - "கிருஷ்ணகாந்த்" வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை- எங்கே அவன் விழுந்து விடுவானோ என்று நான் பயந்தேன்?" என்றான். தேங்க் காட் என்றான் கண்ணன். கோபாலன் பெருமூச்சு எடுத்தான். சக்திபெருமாள், அறிவுமதி, அன்புநம்பி ஆகியோர் புன்னகைத்தனர். ஒன்றும் பேசவில்லை- அவர்களுக்குள் மகிழ்ச்சி ஒரு மௌனகீதத்தை தோற்றுவித்தது...,ம் கிருஷ்ணகாந்தை இப்படி மகிழ்ச்சியோடு பார்த்து எத்தனை நாளாயிற்று?

உதகை மலைகளைச் சுற்றிப் பார்த்து, மைசூர் அரண்மனைகளை சுற்றிப்பார்த்து , அணைக்கட்டுகளை சுற்றிப்பார்த்து, -பெங்களூர் நகரில் ஒரு தங்கும் விடுதியில் கிருஷ்ணகாந்தும், சௌதாமினியும் அமர்ந்திருந்தார்கள்.

முதல் மாடியில் - அவர்கள் தங்கியிருந்த அறை அமைந்திருந்தது. . அறையின் மேற்கு புறம். ஒருபால்கனி – ஒரு சிட்அவுட் இருவர் நாற்காலியில் அமர்ந்து பேசலாம்., கீழே பரபரப்பான ஒரு சாலை ... வேடிக்கைப் பார்த்தவாறே அந்த முன்னிரவு 7 மணி சுமாருக்கு கிருஷ்யகாந்தும் தௌதாமிணியும் அமர்ந்து இருந்தார்கள்....

சௌதாமினி " இப்படியே போய் கடைவீதி பூராவும் ஒரு சுற்று சுற்றி வருலாம்"என்றாள். எங்கேயும் வேண்டாம் ; இங்கேயே , இப்படியே உன்னை பார்த்துட்டு இருக்கப் போறேன்னு"- என்று சொன்னான் கிருஷ்ணகாந்த்"ம்" அப்படியா என்றாள் சௌதாமினி. இருவரும் சிரித்தார்கள்.

"கிருஷ்ணகாந்த் தொடர்ந்தான்-" இனி பார் என் வாழ்க்கையை! எல்லாவற்றிலும் எனக்கு வெற்றிதான்..., உங்க career - இதுவரைக்கும் ரொம்ப நல்லாத்தான் இருக்கு.... என்றாள். பின் சௌதாமினி "எனக்கு ஒரு ஆசை" என்றாள். "என்ன" என்றான் கிருஷ்ணகாந்த் "நீங்க நம்ம தேசத்துக்காக டெஸ்ட் மாட்சிலே கிரிக்கெட் விளையாடனும் நீங்க ., நேஷனல் டீம்லே இடம் பிடிக்கனும் நீங்க..." என்றாள்.

கிருஷ்ணகாந்த்தின் கண்கள் அகல விரிந்தன. சௌதாமினிகண்கள் அவனையே உற்று நோக்கின. நான் உன்னை நேசிக்கிறேன், என்று சொல்வது போல் இருந்தது கிருஷ்ணகாந்திற்கு.

“நா ஒன்னை ஒரு ராணி மாதிரி வச்சுக்கப் போறேன்” இனிமே எங்க வீட்டு ராணி நீ., உனக்கு என்ன வேணுமோ கேளு.. அது கிடைக்கும் என் சக்திற்கு அப்பாற்பட்ட விஷயம்னாலும் -உனக்காக கொண்டு வந்து கொடுப்பேன்.”என்றான் கிருஷ்ணகாந்த்..,

“ம்....” என்றாள் சௌதாமினி . சௌதாமினிகண்கள் அவனையே உற்று நோக்கின; அவள் கண்கள் பனித்திருந்தன.

# 15. பேசும் பொற்சித்திரமே.

வருடம் -1976

கிருஷ்ணகாந்த்திற்கும் சௌதாமினிக்கும் அப்படியொரு புரிதல் அமைந்துவிட்டது. சௌதாமினி எந்த ஒரு விஷயத்தையும் எளிதில் புரிந்து கொள்பவளாக இருந்தாள். அவளுக்கு நீண்ட விளக்கங்கள் தேவைப்படவில்லை. எந்த விஷயத்தையும் சுருக்கமாக சொன்னால் போதும், அதை புரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்வாள்.

அதே சமயம் தன் கருத்துக்களையும் வெளிப்படையாக சொல்ல அவள் தயங்கியதே இல்லை. கிருஷ்ணகாந்த்தும் மாற்றுக் கருத்துக்களையும் எப்போதும் பரந்த மனதோடு அனுகினான்.. தன் கருத்து பெரிது என வாதம் செய்யும் வழக்கம் அவனிடம் இல்லை.

சௌதாமினிக்கும் - கோகிலவாணிக்கும் இடையேயும், சௌதாமினிக்கும் - கோவிந்தராசனுக்கும் இடையேயும் நல்ல புரிதல் இருந்தது. வீட்டிற்கு பெரியவர்களான அவர்களின் தேவைகளை புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு உணவு சமைத்தாள் சௌதாமினி., அவர்களோடு சிரித்த முகத்தோடும், அன்போடும் பேசினாள். ..

கிருஷ்ணகாந்த் ஒரு ஞாயிற்றுக்கிழமை கூட வீட்டில் தங்கவில்லை., கிரிக்கெட்டின் மீது அவனுக்கிருந்த ஈடுபாடு குறையவேயில்லை. பயிற்சி.. பயிற்சி.. பயிற்சிதான்.. அவன் கம்பெனியின் மாநில அளவிலான கிரிக்கெட் டீமில்அவன் இப்போது முக்கிய விளையாட்டுக்காரன். ஏனவே வார நாட்களிலும் - அவனுக்கு லீக் மாட்ச்சுகள் எங்காவது நடந்தது. அடிக்கடி வெளியூர் பயணம்.. மூன்று நாட்கள் மாட்சுகள் கூட விளையாட ஆரம்பித்து விட்டான் கிருஷ்ணகாந்த்.

‘டெஸ்ட் மாட்ச்’ சீசன் வேறு வந்து விட்டது. டெஸ்ட் மாட்சை பார்ப்பதற்காகவே பம்பாய், கல்கத்தா,டெல்லி என பல ஊர்களுக்கு தன்னுடைய சக விளையாட்டு வீரர்களுடன் அவன் போய்விட்டான்.

சௌதாமினியை வெளியே அழைத்துச் செல்வதோ – அவளுடன் நீண்ட நேரம் பேசவோ அவனுக்கு நேரமே இல்லாமல் போனது. ஒரு லட்சிய வேட்கை (achievement,,,,) கொண்டவனாக அவன் இருந்தான்.

ஆனால் வீட்டிற்கு வந்து விட்டால், சௌதாமினி அவன் பக்கமே அமர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும். எதையாவது பேசு; எதையாவது பேசு..என்று கேட்டுக் கொண்டே அவன் இருப்பான். அவன் போக்கு சௌதாமினிக்கு சிரிப்பை கொடுத்து விடும் ; சிரித்து விடுவாள் அவள்..!

இந்நிலை தொடர்ந்து இருக்க... புது மகிழ்ச்சி எங்கும் தங்கி இருக்க, சௌதாமினி கருவுற்றாள். அந்த வீட்டின் மகிழ்ச்சி ஆயிரம் மடங்கு கூடிவிட்டது.

கோகிலவாணி அவனை கண் என கவனித்துக் கொண்டாள். கோவிந்தராசனுக்கு அவ்வளவு மகிழ்ச்சி..கிருஷ்ணகாந்த் வெளியூர் பயணங்களை குறைத்துக் கொண்டான். ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டில் தங்க ஆரம்பித்தான். அவளுக்கு வேண்டிய மருத்துவ பரிசோதனைகள், அதற்குரிய இஇஇஇஇ நடந்தன. ஒரு குறையும் வந்துவிடக்கூடாது என்ற கவலையுடன் இருந்தான் அவன்.

சௌதாமினியை அழைத்துப்போக அவள் தந்தை மயூரநாதனும், தாய் மங்களமும் சிறு நகரிலிருந்து வந்து விட்டார்கள். எல்லோரும் அமர்ந்து பேசலானார்கள். தலைப்பிரசவம் எங்க வீட்டில்தான் நடக்கனும் என்றார் மயூரநாதன். கிருஷ்ணகாந்த் வெளிப்படையாகவே "அது சின்ன ஊர் மாமா மெடிக்கல் பெசிலிட்டி ரொம்ப கம்மி" சென்னையிலேயே இருக்கட்டும் அவ. நாங்களே பார்த்துக்கறோம்.-" என்றான் கிருஷ்ணகாந்த்.

அப்படி பழக்கமே இல்லையே மாப்பிள்ளை! என்றார் மயூரநாதன். "என்ன சம்பந்தி – நீங்களே சொல்லுங்க" என்றார் அவர்.

கோவிந்தராசன் கிருஷ்ணகாந்த் சொல்வதிலும் ஒர் அர்த்தம் இருக்கிறதே.. என்றார். கிருஷ்ணகாந்த் உடனே ஒன்னு செய்வோம்... நீங்களும் அத்தையும் இங்கேயே இருந்துங்க.அவளுக்கு பிரசவம் எல்லாம் முடியட்டும் அப்புறம் போகலாம்-" என்றான்கிருஷ்ணகாந்த். இன்னும் ஆறு மாசம் இங்கே தங்க முடியாது. சரி – ஒன்னு செய்யறோம். ஊருக்கு போயிட்டு இன்னும் ஒரு மாசம் கழிச்சு வந்துடறோம்.. இங்கேயே இருக்கிறோம். குழந்தை பிறந்து ஒரு மாசம் வரைக்கும் இருந்துட்டு அப்புறமா போகிறோம்.... உங்க மனசுப்படியே நடக்கட்டும் சந்தோசம்தான். ஆனால் செலவு எல்லாம் எங்களுடையதுதான் என்றார்.

கோவிந்தராசன் உடனே – பணத்தைப் பற்றியே பேசாதீங்க சம்பந்தி .. கடவுள் எனக்கு ஒரு குறையும் வைக்கலே. சௌதாமினி எங்க மக மாதிரி அவளுக்கு எத்தனையும் செய்வோம்... என்றார்.

கிருஷ்ணகாந்த் மெலிதாக சிரித்தான். இதுவரை ஒன்றுமே போசாமல் இருந்த சௌதாமினி "ஜெயிச்சுட்டீங்க..." என்றாள், கிருஷ்ணகாந்தைப் பார்த்து.. எல்லோர் முன்னாலும் அவள் முகத்திலும் புன்னகை வெள்ளம்.

கிருஷ்ணகாந்த –அதற்கு ஒரு புன்னகையை பதிலாக்ச் சொன்னான்.

சென்னையில் வசதி மிக்க, பகழ் பெற்ற ஒரு மருத்துவ மனையில், சிறப்பு வார்டில் சௌதாமினியை மருத்துவர்கள் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அனுமதித்தார்கள்.

அன்று மாலையே சௌதாமினிக்கு வலி எடுத்தது... முன்னிரவு அவள் ஒரு அழகிய ஓர் ஆண்குழந்தையை பெற்றெடுத்தாள்.

ஒரு புதிய பேசும் பொற்சித்திரம் மண்ணில் பிறந்துவிட்டது.

# 16. நான் உன்னைச் சேர்ந்த செல்வம்

வருடம் 1980

கிருஷ்ணகாந்தின் வீட்டின் ஹாலில் (வரவேற்பு அறையும் அதுதான்) இப்போது டி. வி வந்து அமர்ந்துவிட்டது. கோகிலவாணி, சௌதாமினி, ஏன், கோவிந்தராசன் அனைவருக்கும் புதியதோர் உலகம் கண் முன் விரிந்தது. கிருஷ்ணகாந்த் கதை மட்டும் என்னவாம்? அலுவலக பணிகள் முடிந்து. நண்பர்கள் சந்திப்பை முடித்துக் கொண்டு எவ்வளவு விரைவில் வீட்டிற்கு வரமுடியுமோ, அவ்வளவு விரைவில் வீட்டிற்கு வந்தான். வந்துவிட்டால் டி.வி யே கதி. குடும்பமே ஹாலில் அமர்ந்து டி.வி யைப் பார்க்கும்.

கிருஷ்ணகாந்திற்கு இன்னொரு மகிழ்ச்சியும் கூட., கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகளை வீட்டில் அமர்ந்தபடியே, நுணுக்கமாக, நுட்பமாக காண இப்போது முடிந்தது. ஒவ்வொரு விக்கெட் விழும்போதும், பேட்ஸ்மேன் என்ன தவறு செய்தான் என்பதை அவனால் நுட்பமாக கவனிக்க முடிந்தது. கால்கள் உரிய திசையில் வேகமாக இயங்கவில்லையா , பந்து வந்த திசையை, விழப்போகும் இடத்தை பேட்ஸ்மேன் சரியாக ஊகிக்கவில்லையா என நுட்பமாக அவன் டி.வி முன் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தான். அடுத்த நாள் அவன் கிரிக்கெட் பிரிய ரசிகர்கள் மத்தியில் தேநீர் அருந்திக் கொண்டே பேசுவதற்கு அவனுக்கு விஷயம் கிடைத்தது.

மெல்ல தொலைக்காட்சி ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு இருந்தது., அது போதாது என்று வீடு முழுக்க – சமையல் அறை முழுக்க இப்போது எல்லாம் மின்சாதனங்கள்தான். கிரைண்டரும், மிக்ஸியும்,பிரிட்ஜும் வந்து பல நாட்கள் ஆகிவிட்ட போதிலும் - இப்போது மேலும் பல உபகரணங்கள்.., வீடு நிறைய பொருட்கள்…?

இது ஒருபுறம் இருக்க கோவிந்தராசன் இப்போது தன் வாழ்வில் இரண்டாவது முறையாக ஓய்வு பெற்றார். கிருஷ்ணகாந்த் வேலைக்கு வந்த பின்பும், குடம்ப பொறுப்புகள், கணக்கு வழக்குகள்,அனைத்தையும் அவரே மேற்கொண்டு வந்தார். கிருஷ்ணகாந்த் எதிலும் பட்டுக் கொள்ளமாட்டான். கிருஷ்ணகாந்த் எதிலும் பட்டுக் கொள்ளமாட்டான்.

இப்போது அத்தனை பொறுப்பும் சௌதாமணியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. கிருஷ்ணகாந்த்திற்கு சம்பளம் வரும்.இடைவெளியில் வேறுபடிகள் வரும். P.F, Alavance ,வரும். எத்தனை தொகை வந்தாலும் அவன் தன் செலவுக்கென கொஞ்சம் எடுத்துக் கொள்வான். – மீதியை சௌதாமணியிடம் கொடுத்துவிடுவான். .,

கொடுப்பதோடு சரி., பின் அதற்கு கணக்கு கேட்கும் பழக்கம் அவனிடம் இல்லை.

சௌதாமணியியே ஒவ்வொரு வரவுக்கும் செலவுக்கும் கணக்கு எழுதி வைப்பாள். கிருஷ்ணகாந்த் எப்போதாவது ஓய்வாக படுத்து இருக்கும்போது தன் நோட்டுப் பத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து ஒவ்வொரு கணக்காக, ஒவ்வொரு வரவாக, ஒவ்வொரு செலவாக படித்துக் காட்டுவாள்.

கிருஷ்ணகாந்த் “ம் ம்” என்று ம் கொட்டிக் கொண்டிருப்பான். பின் அப்படியே தூங்கிவிடுவான்.சௌதாமணிக்கு சில சமயம் சிரிப்பு வரும். சில சமயம் போபம் வரும். “ நீங்க தூங்கறதுக்கு நான் ஒருத்தி எதற்கு மெனக் கெட்டு படிக்கனும்..?என்பாள். அது உனக்கு நீயே படித்துக் கொள்கிறாய். அது எல்லாம் எனக்கு வேண்டாம்.., நீ மட்டும் போதும் என்பான் . சௌதாமணிக்கு சிரிப்பு வந்துவிடும். அவன் தலையில் ஒரு குட்டு குட்டிவிட்டு போய்விடுவானஒருசநாள் சௌதாமணி ஹாலில் உட்கார்ந்து டி.வி பார்த்துக் கொண்டீருந்தாள். அது மாலை நேரம்., கிருஷ்ணகாந்தும் ஹாலில் உட்கார்ந்து டி.வி பார்த்துக் கொண்டிருந்தான். கோவிந்தராசன், கோகிலவாணி இருவரும் தங்கள் அறையில் இருந்து வெளியே வந்தார்கள். சௌதாமணி இங்கே வா என்றாள் கோகிலவாண். என்ன அத்தை என்று கோகிலவாணி எழுந்து சென்றாள்.

பார்த்தால் கோவிந்தராசன் மேசை நிறைய பைல்கள்,பா்ஸ்கள், என நிறைத்து வைத்து இருந்தார். சில நகைப் பெட்டிகளும், சாவிக்கொத்துகளும்,கணக்கு நோட்டுகளும் இருந்தன. “என்ன மாமா இதெல்லாம் என்றாள் சௌதாமணி “இனிமேல் இதெல்லாம் நீதான் பார்த்துக்கனும் .. பிக்செட் டெபாசிட் ரெசிப்ட்கள்,ரெக்கரிங் டெபாசிட் புத்தகம், L.I.C. பாலிஸி , பேங்க் லாக்கர், சாவி, நகைப் பெட்டி , ஊர்லே இருக்கிற வீட்டுப்பத்திரம், கையிலே இருக்கிற ரொக்கம் எல்லாம் இதிலே இருக்கு.. இது எல்லாம் எங்க சேமிப்பு….. இனிமே அது அத்தனையும் பார்த்துக்கறது ஓம் பொறுப்புதான்.எனக்கு பென்சன் வரும்.. மருந்து மாத்திரைக்கு எடுத்து வச்சுட்டு, மிச்சம் அனைத்தும் ஒங்கிட்டே கொடுத்துடுவேன்… நீயே எல்லாத்தையும் கவனிச்சுக்கோ! என்றார்.

சௌதாமணி வெளிறிவிட்டாள்… பயந்துவிட்டாள். “என்ன மாமா!என்மேலே ஏதாச்சும் கோபமா? நான் ஏதாச்சு தப்பு பண்ணிட்டேனா, நான் எத்தனை சொன்னாலும் கேக்கலை, அவருதான் மொத்த சம்பள பணத்தையும் கொடுக்கிறாரு…” என்றாள்.

கோவிந்தராசன் பெரிதாக சிரித்தார்.., “அட போம்மா! நாங்களும் உன்னை கவனிச்சுட்டுத்தான் இருக்கோம்., நீ லட்சுமி தங்கம் எங்களைவிட